15

# திருவள்ளுவர் சுட்டும் அன்புணர்வு

**முனைவர் மு. வையாபுரி**
**உதவிப் பேராசிரியர், தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்**
**தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை – 15**
vaiyapurimurugan@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

உலகத்து உயிர்களிலேயே மேம்பட்ட வாழ்வியல் தன்மைகளைக் கொண்டுள்ள மனித இனத்தின் தனித்தன்மைக்குப் பகுத்தறியும் உணர்வும், அன்பு என்னும் உணர்வும், அதனால் கட்டமைக்கப்படும் குடும்ப வாழ்க்கை அல்லது இல்வாழ்க்கை என்னும் வாழ்வியல் முறையும் அடிப்படையாக அமைகின்றன. இல்வாழ்க்கை சிறக்க வேண்டுமெனில் இல்வாழ்வில் ஈடுபடுபவன் வாழ்வில் அறநெறிகளைப் பின்பற்ற வேண்டும். இல்வாழ்வின் மேன்மை என்பது அன்பு என்னும் உணர்வாலும் பண்பு என்னும் அறத்தாலும் கட்டமைக்கப்படும் ஒன்று என்பது திருவள்ளுவரின் கோட்பாடு மட்டுமன்று, பழந்தமிழரின் கோட்பாடும் அதுவே ஆகும்.

**ஆய்வு நோக்கம்**

அன்பு எனும் உணர்வு இல்வாழ்க்கையைக் கட்டமைக்க அடிப்படைக் காரணியாக இருக்கிறது. ஆண்பெண் இருபாலர்க்கும் பொதுவான பண்பாகிய அறத்தை நிலைநாட்ட அன்புணர்வினால் மட்டுமே இயலும் என்பதே வள்ளுவரின் கோட்பாடாகும். இக்கருத்தாக்கங்களை முன்னிறுத்தி இந்த ஆய்வு அமைந்துள்ளது.

**முன்னுரை**

ஒரு செல் உயிரிகள் முதல் சிக்கலான உடலமைப்புகளைக் கொண்ட பாலூட்டிகள் வரை ஒவ்வொன்றும் அதனதன் தன்மைகளுக்கேற்ப பல்வேறு உணர்வுகளைக் கொண்டுள்ளன. இதனை உணர்ந்தே பழந்தமிழ் இலக்கணமான தொல்காப்பியம் உயிர்களை அவற்றின் உணர்வுகளின் தன்மைகளுக்கேற்ப வகைப்படுத்தியுள்ளது.[1] திருவள்ளுவரும் அன்பு என்னும் உணர்விற்கு நேர் மாறாக அமையும் காமம், வெகுளி, மயக்கம் என்னும் உணர்வுகளை உடலைவிட்டே நீக்கிவிட வேண்டும்[2] என்று வலியுறுத்துகின்றார். அவ்வகையில் இந்த உலகத்து உயிர்களிலேயே மேம்பட்ட வாழ்வியல் தன்மைகளைக் கொண்டுள்ள மனித இனத்தின் தனித்தன்மைக்குப் பகுத்தறியும் உணர்வும், அன்பு என்னும் உணர்வும், அதனால்

கட்டமைக்கப்படும் குடும்ப வாழ்க்கை அல்லது இல்வாழ்க்கை என்னும் வாழ்வியல் முறையும் அடிப்படையாக அமைகின்றன. அவ்வகையில் இந்தக் கட்டுரை அன்பு என்னும் உணர்வினால் கட்டமைக்கப்படும் இல்வாழ்க்கை சிறக்க வள்ளுவம் கூறும் வாழ்வியல் அற உணர்வுகளை சுருக்கமாக எடுத்துரைக்கின்றது.

**இல்வாழ்வின் அடிப்படை அன்பு**

"அன்பு" என்னும் உணர்வுதான் இந்த உலகம் இதுநாள்வரை நிலைபெற்று இருப்பதற்கு அடிப்படையாக இருக்கின்றது. இந்த உலகத்தின் அமைதி என்பது அன்பால் கட்டிக்காக்கப்படுகின்றது. அடிப்படையில் நாம் ஒவ்வொருவரும் முதலில் நம்மேல், நமது உடலின்மேல் அன்புகொண்டு இன்பம் காண வேண்டும். தன்னையும், தனது உடலையும் நேசிக்காதவன் பிறர் மீதும் பிற உயிர்கள் மீதும் அன்பு காட்ட இயலாது. அன்பின் அடுத்தகட்ட வளர்ச்சிதான் காதல். அந்தக் காதலால் கட்டமைக்கப்படுவதுதான் கணவன் மனைவி என்னும் உறவு. இவர்கள் இருவரும் இணைந்து மேற்கொள்ளும் வாழ்வியல் செயல்பாடுகள்தாம் இல்லறம், இல்வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை என்பது.

இல்வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைபவை அன்பு என்னும் உணர்வும் அறன் என்ற பண்புமே[3] என்பது திருவள்ளுவரின் கோட்பாடாகும். இவ்வாறு அன்பாலும் அறத்தாலும் கட்டமைக்கப்பட்டு எவ்வகையிலும் பிறர் பழியில்லாமல் அறநெறியில் இல்லறம் ஆற்றுவோன் கடைபிடிக்க வேண்டிய வாழ்வியல் நெறிகளைத் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

**அன்பின் மேன்மை**

உருவமற்ற, தூய உள்ளத்தில் தோன்றும் அன்பு என்பதை வெளிப்படுத்தும் வழிகள் பலவுண்டு. அத்தகைய அன்பினை அடைத்து வைக்கும் தாழ் ஏதேனும் உண்டோ? உள்ளே இருக்கும் அன்பை அன்புடையவரின் சிறு கண்ணீரே பலரும் அறியும்படி அதனை வெளிப்படுத்தி விடும்.[4] என்று திருவள்ளுவர் வினவுகின்றார். இவ்வாறு அன்பு உடையவர் தம் உடம்மையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழும் தன்மை உடையவர். மாறாக அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்பவர் என்கிறார். நம் உயிர் தங்கியிருக்க களமாக விளங்குவது நம் உடல். இவ்வுடலோடு உயிர்க்கு உள்ள தொடர்பு என்பது பிற உயிர்களின் பால் அன்பு செய்வதற்கு ஏற்பட்ட நெறியின் பயன் என்று கூறுவர் அறிவுடையோர் என்று திருவள்ளுவர் உயிரின் மேன்மையை எடுத்துரைக்கின்றார்.

**அன்பும் நட்பும்**

அன்பின் பிடிக்குள் அடங்காதவர் எவருமிலர். அன்பு என்னும் தன்மையானது நாம் பிறரிடம் விரும்பம் உடையவராக வாழும் தன்மையை நமக்குத் தரும் இயல்புடையது. அந்த அன்பானது எல்லோரிடத்திலும் நட்பு என்று சொல்லப்படும் அளவற்ற சிறப்பைத் தரும். உலகத்தில் எல்லோராலும் இன்பமுற்று வாழ்தல் எளிதன்று. அவ்வாறு உலகத்தில் இன்பமுற்று வாழ்கின்றவர் அடையும் சிறப்பு என்பது அன்பு உடையவராகிப் பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன்[5] என்று கூறுவர். மேலும் அன்பு என்பது அற வழியில் நிற்போருக்கே துணையாக நிற்கும் என்று கூறுபவர் அறியாதவராவார். அவ்வாறு கூறுவதை நன்கு ஆராய்ந்து பார்த்தால் வீரத்திற்கும் அதுவே துணையாக நிற்கின்றது என்பது திருவள்ளுவர் நிலைப்பாடாகும்.

**அன்பற்ற உயிரின் நிலை**

அன்பு இல்லாத உயிரை அறம் வருத்தும்[6] என்கிறார் திருவள்ளுவர். அது எவ்வாறு வருத்துமெனில் எலும்பு இல்லாத உடம்போடு வாழும் புழுவை வெயில் காய்ந்து வருத்துவதுபோல் அறம் வருத்தும் என்கிறார். அகத்தில் அன்பு இல்லாமல் வாழும் உயிர்வாழ்க்கை என்பது வளமற்ற பாலைநிலத்தில் பட்ட மரம் தளிர்த்தாற் போன்றது என்கிறார். மேலும் அன்பினை உடம்பின் அக உறுப்பாகத் திருவள்ளுவர் உருவகப்படுத்துகின்றார். மேலும், உடம்பின் அகத்து உறுப்பாகிய அன்பு இல்லாதவர்க்கு உடம்பின் புறத்து உறுப்புகள் எல்லாம் என்ன பயனை செய்யும் [7] என்று வினவுகின்றார். மேலும், அன்புடையாரின் அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர்நின்ற உடம்பாகும் என்றும் அவ்வாறின்றி அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல் போர்த்த வெற்றுடம்பே ஆகும் என்று அன்பின் மேன்மையை எடுத்துரைக்கின்றார். இந்த அன்பு என்னும் உணர்வே கணவன் மனைவி என்னும் உறவால் கட்டமைக்கப்படும் இல்வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்றது. இல்வாழ்க்கை சிறக்க வேண்டுமெனில் இல்வாழ்வில் ஈடுபடுபவன் வாழ்வில் அறநெறிகளைப் பின்பற்ற வேண்டும். அவனுக்கென்று சில கடமைகளும் உள்ளன. இவற்றைப் பற்றித் திருவள்ளுவர் விரிவாகவே எடுத்துரைக்கின்றார்.

**இல்வாழ்வானின் கடமைகள்**

இல்வாழ்வில் ஈடுபட்டுள்ளவன் அறத்தின் இயல்புடைய அரசர், அந்தணர், வணிகர் என்னும் மூவர்க்கும் நல்வழியில் நின்று துணையாக இருப்பதோடு, உலகப் பற்றைத் துறந்தவர்க்கும், வறியவர்க்கும், ஒருவருமின்றி தன்னிடம் வந்து இரந்தார்க்கும் இல்லறத்தான் என்று சிறப்பித்துச் சொல்லப்படுபவன் துணையாக இருக்கவேண்டும்[8] என்கிறார் திருவள்ளுவர். மேலும் நம் ஒவ்வொருவரின் வாழ்விற்கும் இன்றியமையாத ஒன்று பொருள். பொருளின்றி வாழ்வு

சிறக்காது. அந்தப் பொருளைச் சேர்க்கும்போது பழிக்கு அஞ்சியும், சேர்த்த பொருளைச் செலவு செய்யும்போது பகுத்து உண்ணுதல் என்னும் உணர்வோடும் செயல்பட்டால் வாழ்க்கையின் ஒழுங்கு எப்போதும் குறைவதில்லை என்கிறார் திருவள்ளுவர். பகுத்துண்ணுதல் அன்பு என்னும் உணர்வினால் மட்டுமே சாத்தியமாகும்.

**அறவழியில் இல்வாழ்வோனே அனைவரிலும் மேம்பட்டவன்**

அன்பு கொண்டு, அறநெறியில் இல்வாழ்க்கையை நடத்தி வாழ்பவன், அதனைத் தவிர்த்து வேறு நெறியில் சென்று பெறத்தக்கது ஒன்றுமில்லை. அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ்பவனே எல்லோரையும்விட மேம்பட்டவனாக விளங்குகின்றவன்[9] என்பது வள்ளுவம். ஒருவனுடைய இல்வாழ்க்கை முழுமையாக நிறைவுற்ற பின்னர், இல்லற வாழ்வில் இருந்துகொண்டே தவ வாழ்க்கையில் ஈடுபடுதல் என்பது தமிழர் மரபு. இருப்பினும் தானும் அறம் தவறாத இல்வாழ்க்கை வாழ்ந்து, தன்னைச் சார்ந்த மற்றவரையும் அறநெறியில் ஒழுகச் செய்து வாழ்கின்றவனுடைய வாழ்க்கை தவம் செய்கின்றவருடைய வாழ்க்கையைவிட மிக்க வல்லமை உடைய வாழ்க்கை[10] என்று குறிப்பிடுகின்றார் திருவள்ளுவர்.

மேலும், இறைநிலை என்பது அனைவராலும் போற்றப்படும் ஒன்று. பழந்தமிழர் வானுலகத்தில் தெய்வங்கள் வாழ்வதாக நம்பினர். அந்தச் சமூக மதிப்பீடுகளை உள்வாங்கியே திருவள்ளுவர் உலகத்தில் அறநெறியில் நின்று இல்வாழ்வில் ஈடுபடுகின்றவன் வானில் உறைவதாக நம்பப்படும் தெய்வமுறையில் வைத்து மதிக்கப்படுவான் என்கிறார்.[11] இல்வாழ்வின் மேன்மையைச் சிறப்பித்துக்கூறும் திருவள்ளுவர் இல்வாழ்வின் ஒரு பகுதியாகப் பங்காற்றும் வாழ்க்கைத் துணையின் மேன்மையினையும் எடுத்துரைக்கின்றார்.

**வாழ்க்கைத் துணை என்பவள் யார்?**

அன்பும், அறனும் ஒருங்கே வாய்க்கப்பெற்று, இல்வாழ்க்கைக்கு ஏற்ற நல்ல பண்புகளை உடையவளாகவும், தனது கணவனுடைய பொருள் வளத்திற்கேற்றவாறு தக்க வகையில் வாழ்க்கை நடத்துகின்றவளே நல்ல வாழ்க்கைத் துணையாவாள்[12] என்று திருக்குறள் குறிப்பிடுகின்றது. ஒருவனுடைய இல்வாழ்க்கைக்குத் தேவையான நல்ல பண்புகள் அவன் மனைவியிடம் இல்லாமல் போனால், அவன் வாழ்க்கையில் வேறு எவ்வளவு சிறப்புகள் இருப்பினும் அவற்றால் ஒரு பயனும் இல்லை என்பது வள்ளுவரின் முடிபு. மேலும் மனைவி நற்பண்பு உடையவளாகத் திகழும்போது இல்வாழ்க்கையில் அனைத்தும் முழுமை பெற்றதாக அமையும். மாறாக மனைவி நற்பண்புகள் அற்றவளாக அமையும் வாழ்க்கையில் எதுவும் மிஞ்சுவதில்லை.

**பெண்ணின் பெருமை**

இல்வாழ்க்கை என்பது ஒருவர் மாட்டு மற்றொருவர் கொண்டிருக்கின்ற அன்பினாலும் நம்பிக்கையினாலும் மட்டுமே – அடிப்படையிலேயே - கட்டமைக்கப்படுகின்றது. அதுவும் இல்லறத்திற்கு அடிப்படையாக விளங்கும் பெண் இல்வாழ்க்கையில் கற்பு (நம்பிக்கை) என்னும் உறுதிநிலையில் இருக்கப் பெற்றால், அந்தப் பெண்ணைவிட பெருமையுடையது வேறொன்றுமில்லை[13] என்று திருக்குறள் குறிப்பிடுகின்றது. இல்வாழ்க்கையில் திண்மையுடனும், உறுதியுடனும், நம்பிக்கையுடனும் ஈடுபடும் பெண்ணின் சிறப்பைத் தமிழ் இலக்கியங்கள் சிறப்பித்துப் பேசுகின்றன. தன் கணவன்பால் முழுமையாக அன்புகொண்டு அறநெறி தவறாது இல்வாழ்க்கையை நடத்தும் பெண் பெய் என்றால் மழை பெய்யும் [14] என்பது இங்கு பெண்ணின் மன வலிமையைக் குறிக்கின்றது எனலாம். மேலும் இல்வாழ்க்கையில் ஈடுபடும் பெண்கள் மீது முழு நம்பிக்கை கொள்ளவேண்டும். அவர்கள் நிறை என்னும் பண்பால் தம்மைத் தாம் காக்கும் காப்பே சிறந்தது. அவ்வாறல்லாமல் பெண்களைக் கணவர் சிறைச்சாலையுள் அடைத்து வைத்தது போல் காவல் காப்பதால் எந்தப் பயனும் ஏற்படாது என்பது திருவள்ளுவரின் நிலைப்பாடாகும். .

இல்வாழ்க்கையில் ஈடுபடும் பெண் தனது கணவனைப் போற்றிக் கடமைகளைச் செய்தால் மிக்க சிறப்புகளை உடையதாகக் கருதப்படும் மேலுலக வாழ்வைப் பெறுவர் என்கிறது திருக்குறள். திருவள்ளுவர் அவர்காலத்து சமூக அமைப்பினை இங்குப் பிரதிபலித்தார் எனலாம். இல்வாழ்க்கையில் ஈடுபடும் கணவனும் தனது மனைவி மாட்டு மிக்க அன்புகொண்டு கடமையாற்ற வேண்டும் என்பது இக்கால வழக்கம்.

இல்லறம் சிறக்க உள்ளம் சிறக்க வேண்டும். எவ்வாறு உள்ளம் சிறக்கும் எனில், தனது கணவனின் புகழைக் காக்க விரும்பும் மனைவி வாய்க்கப்பெற்றவன் இகழ்ந்துபேசும் பகைவர்முன் ஒரு காளையைப்போல் பீடுநடை போடும் பெருமிதம் மிக்கவன் ஆவான்[15] என்று திருக்குறள் குறிப்பிடுகின்றது.

**முடிவுரை**

இல்வாழ்வின் மேன்மை என்பது அன்பு என்னும் உணர்வாலும் பண்பு என்னும் அறத்தாலும் கட்டமைக்கப்படும் ஒன்று என்பது திருவள்ளுவரின் கோட்பாடு மட்டுமன்று, பழந்தமிழரின் கோட்பாடும் அதுவே ஆகும். இங்கு ஆடவரின் மேன்மையை மட்டும் திருவள்ளுவர் எடுத்துரைக்கின்றார் என்று கொள்ளலாகாது. அது இருபாலாருக்கும் பொருந்தும் என்பதே இன்றைய நிலைப்பாடு. இது எக்காலத்திற்கும் பொருந்தும் வள்ளுவத்தின் மேன்மைமிக்க கோட்பாடுமாகும்.

**அடிக்குறிப்புகள்**

1. தொல்.பொருள்.1526.
2. குறள், 360.
3. குறள், 45.
4. குறள்.71.
5. குறள்,75.
6. குறள்.77.
7. குறள்.80.
8. குறள்.42.
9. குறள்.47.
10. குறள்,49.
11. குறள்,51.
12. குறள்,54.
13. குறள்,55.
14. குறள்,56.
15. குறள்,60.

**துணை நூல்கள் & இணையதளங்கள்**


1. இலக்குவனார். சி. வள்ளுவர் கண்ட இல்லறம் அல்லது காதல் வாழ்க்கை, மீனா புத்தக நிலையம், சென்னை, 1971.
2. திரு.வி.க., திருக்குறள் விரிவுரை (இல்லறவியல்), சாது அச்சுக்கூடம், சென்னை, 1939.
3. ஞா.தேவநேயப்பாவாணர், திருக்குறள் தமிழ் மரபுரை, பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2018
4. தொல்காப்பியர், தொல்காப்பியம் - பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை, 1969.
5. வரதராசனார். மு. டாக்டர், திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்,, பாரிநிலையம், சென்னை, 1959.
6. https://www.tamildigitallibrary.in/
7. https://www.tamilvu.org/